**பஸ்பாகே கோரலே பிரதேச சபை**
**கண்டி மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2019 ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 13 திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கை 2020 மே 31 மற்றும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுன் 30 ஆம் திகதியும் தவிசாளரிற்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பிரிவில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து, நிதிக்கூற்றுகளின் 2019 திசெம்பர் 31 இல் பஸ்பாகே கோரலே பிரதேச சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையான மற்றும் நியாயமான நிலைமையை பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

#### 1.3.1 கணக்கீடு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | இரண்டு செலவின விடயங்களின் செலவுகள் ரூபா 261,586 குறைத்து கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | ரூபா 2,217,989 கடன்கொடுனர் மீதியாக கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். | 2020 ஆண்டில் சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (இ) | வேலை கடன்படுனர் மீதி ரூபா 176,158 கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஈ) | தீர்க்கப்படாத முற்பண மீதி ரூபா 747,821 தொகை கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது | சரியாக கண்க்கீடு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

#### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்கள் பிரகாரம், 05 கணக்கு விடயங்களின் மீதிகள் மற்றும் துணை பதிவேடுகளிற்கு இடையில் ரூபா 6,856,272 ஆன இணங்காமை நிலவியது. | வித்திதயாசத்தை இனங்கண்டு சீர் செய்ய வேண்டும். | வித்தியாசத்தை பரிசீலித்து எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) பெற வேண்டிய கணக்குகள்** | | |
| 05 ஆண்டுகளை விஞ்சிய பெற வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 511,415 ஆனது. | பெற வேண்டிய தொகையை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் அறவிட வேண்டிய நடவடிக்கைகளை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| **(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்** | | |
| 05 ஆண்டு காலத்தை விஞ்சிய செலுத்த வேண்டிய கணக்கு மீதிகளின் கூட்டுத் தொகை ரூபா 1,529,011 ஆனது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் தீர்க்க நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**1.3.4 இணங்காமை**

**1.3.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமை | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 இன் பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாக) விதி கோவை | | | |
| 5(8)பிரிவு | நிலையான சொத்துக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | குறித்த விதி பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | அலுவலர்களின் பற்றாக்குறை நிலவுவதுடன், எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) ஏனைய சுற்றறிக்கை | | | |
| (i) 2016 மார்ச் 17 திகதிய மமா/உ.ஆ. சுற்றறிக்கை இலக்கம் 2016/03 | | | |
| • 4.1 பிரிவு | கடையறைகளை குத்தகைக்கு வழங்க உடன்படுகையில், மாதாந்த வாடகை செலுத்தும் திகதி | உடன்படிக்கை ஒழுங்காக தயாரிக்கப்பட வேண்டும். | புதிய உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| | | மற்றும் தாமதக் கட்டணம் தொடர்பான தகவல்களை உடன்படிக்கையில் உள்ளடக்கியிருக்கவில்லை. | | |
| | • 5.1 பிரிவு | 2008 ஆண்டின் பின்னர் கடையறை வாடகை தொகை மதிப்பீடு செய்ய நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | புதிய மதிப்பீடு செய்யப்பட வேண்டும். | புதிய மதிப்பீடு கிடைத்துள்ளதுடன், அதன் அடிப்படையில் எதிர்காலத்தில் உடன்படிக்கை கைச்சாத்திடுவதாகக அறிவிக்கிறேன். |
| | • 06 பிரிவு | சில்வர் லேன்ட் காணியின் 15 கடையறைகளிற்காக புதிய குத்தகை வாடகை அடிப்படையில் உடன்படிக்கைகள் புதுப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | உடன்படிக்கை கைச்சாத்திட நடவடிக்கை எடுக்க வேண்டும். | புதிய உடன்படிக்கைகளை கைச்சாத்திடுவதாக அறிவிக்கிறேன். |
| (இ) | 2006 பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் 6.3.6 மற்றும் 7.11.1 ஆகிய பிரிவுகள் | பெறுகைகள் மற்றும் தொழிநுட்ப சபை பரிந்துரைகள் எழுத்து மூலம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவையின் பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டுக்கான சபையின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 2,875,212 ஆனதுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவுகளை விஞ்சிய வருமானம் ரூபா 10,773,803 ஆனது.

### 2.2 வருமான நிருவாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆணடு தொடர்பாக முன்வைக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட ட வருமானம், சேர்க்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் பின்வருமாறு.

| | வருமான மூலம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | 2019 சிட்டையிடப்பட்ட வருமானம் | 2019 சேர்க்கப்பட்ட வருமானம் | 2019 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம | 2018 சிட்டையிடப்பட்ட வருமானம | 2018 சேர்க்கப்பட்ட வருமானம | 2018 திசெம்பர் 31 இல் மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| (i) | வீத வரி மற்றும் குத்தகை | 5,000,000 | 5,840,349 | 5,000,738 | 5,091,404 | 1,050,000 | 683,936 | 549,384 | 855,634 |
| (ii) | வாடகை | 4,203,500 | 1,449,217 | 1,595,057 | 213,778 | 2,303,220 | 2,150,220 | 1,780,449 | 576,737 |
| (iii) | அனுமதிப்பத்திரக் கட்டணம் | 715,200 | 735,710 | 717,860 | 343,700 | 480,000 | 782,376 | 695,676 | 519,000 |
| (iv) | ஏனைய வருமானம | 23,375,000 | 18,098,784 | 37,995,424 | 11,391,045 | 25,295,000 | 21,630,955 | 12,096,304 | 32,920,813 |
| | கூட்டுத் தொகை | 33,293,700 | 26,124,060 | 45,309,079 | 17,039,927 | 29,128,220 | 25,247,487 | 15,121,813 | 34,872,184 |

### 2.2.2 வீத வரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **(அ) வீதவரி** | | |
| மீளாய்வாண்டு ஆரம்பத்தில் அறவிட வேண்டியிருந்த ரூபா 414,734 ஆன வீதவரி அறவிடப்படவில்லை. | நிலுவை தொகை அறவிடப்பட நடவடிக்கை எடுக்க வேண்டும். | வருமான பரிசோதகர்களின் பற்றாக் குறை நிலவுவதுடன், எதிர் காலத்தில் சீர் செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| **(ஆ) நீர் கட்டணம்** | | |
| மீளாய்வாண்டு சிட்டையிடப்பட்ட நீர் கட்டணத்திலிருந்து ரூபா 2,977,635 தொகை அறவிடப்படவில்லை. | வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர் செய்து கொள்ள நடவடிக்கை எடுக்கிறேன். |

### 2.2.3 அனுமதிப்பத்திர கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| **முச்சக்கர வண்டி கட்டணம்** | | |
| மீளாய்வாண்டு இறுதியில் ரூபா 561,100 ஆன முச்சக்கர வண்டி கட்டணம் அறவிட வேண்டியதாக இருந்தது. | முச்சக்கர வண்டி கட்டணம் அறவிடப்பட வேண்டும் | எதிர்காலத்தில் அறவிடுவதற்கான நடவடிக்கைகளை எடுக்கிறேன். |

### 2.2.4 நீதிமன்ற தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 திசெம்பர் 31 திதிக்கு பெற வேண்டிய நீதிமன்ற தண்டப்பணம் ரூபா 2,301,215 மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 9,089,830 ஆனது. | பெற வேண்டிய தொகையை பெற்றுக் கொள்ள வேண்டும். | மீள் நிரப்பிக் கொள்ள எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை அதிகார சட்டத்தின் 03 பந்தியின் கீழ் பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொதுப் பாதைகள் தொடர்பான விடயங்களை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்தலும், மக்கள் நலன், இலகு மற்றும் நலன்புரிச் சேவைகள் போன்ற சபையினால் மேற்கொள்ள வேண்டிய செயற்பாடுகளை நிறைவேற்றுவது தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

(அ) போதியளவு நிறைவேற்றப்படாத செயற்பாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | ரூபா 46,763,670 பெறுமதியான 04 நீர் உத்தேச திட்டங்களிற்காக நீர் சுத்திகரிப்பான் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | உத்தேசம் துரிதமாக நடமுறைப்படுத்தப்பட வேண்டும். | தேவையான முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ii) | ரூபா 12,742,700 பெறுமதியான 07 கட்டிடங்களை பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | சொத்துக்களை பயன்படுத்தக் கூடிய வகையில் தயாரிக்க வேண்டும். | முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

(ஆ) கழிவுப் பொருள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| வெளியேற்றப்படும் கழிவு பொருட்களை, மூலப்பொருளாகப் பயன்படுத்தி கொம்போஸ்ட் உற்பத்தி செய்வது தொடர்பாக கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | கொம்போஸ்ட் உற்பத்தி செய்வது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டும். | அறிக்கை தயாரிக்கப்பட்டு சுற்றாடல் அதிகார சபைக்கு சமர்பிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கிறேன். |

**3.2 முகாமைத்துவ வினைத்திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அங்கீகாரமின்றி 05 செலவின விடயங்களில் 19 முதல் 57 சதவீதம் வரை ஒதுக்கீட்டை விஞ்சி செலவிடப்பட்டிருந்தது. | ஒதுக்கீட்டு எல்லையினுள் செலவு செய்ய வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |

**3.3 மனித வள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | ஊழியர் வெற்றிடம் மற்றும் மிகை | | |
| | மீளாய்வாண்டு இறுதியில் அங்கீகரிக்கப்பட்ட பதவிகளில் 13 வெற்றிடங்கள் காணப்பட்டன. | வெற்றிடங்ளை நிரப்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். | அங்கீகாரம் கோரப்பட்டுள்ளது, அரச கொள்கையின் மீது தாமதித்துள்ளதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | ஊழியர் கடன் | | |
| | 02 அலுவலர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 239,997 ஆன கடன் மீதி அறவிடப்பட்டிருக்கவில்லை. | கடன் மீதியை அறவிட நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையை பெற்று முன் நடவடிக்கை எடுக்கிறேன் |

**3.4 செயற்பாட்டு வினைத்திறமையின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- | --- |
| (அ) | சில்வர் லேன்ட் பொது காணியில் 15 கடையறைகளிலிருந்து புதிய மதிப்பீட்டு குத்தகைக்கு பதிலாக பழைய குத்தகை வாடகை அறவிடப்பட்டதால், ரூபா 118,000 ஆன வருமானம் இழக்கப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீட்டின் பிரகாரம் வருமானம் அறவிட வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (ஆ) | 2009 ஆண்டின் பின்னர் வீதவரி மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | காலத்திற்குரியவாறு மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சீர்செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 சொத்தக்கள் பதியப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 05 சனசமூக நிலையங்களின் பெறுமதிகளை இனங்கண்டு பதியப்பட்டிருக்கவில்லை. | சொத்துக்களை இனங்கண்டு பதிய வேண்டும். | எதிர்காலத்தில் இனங்கண்டு பதிகிறேன். |

### 3.5.2 பராமரிப்பு மற்றும் பழுதுபார்த்தல் மேற்கொள்ளப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 386,000 பெறுமதியான கிணறுகள் மற்றும் 27 நீர் ஊற்றுக்களை இனங்கண்டு மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை இனங்கண்டு பராமரிக்க வேண்டும். | எதிர் காலத்தில், பழுதுபார்க்க நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.5.3 சொத்துக்களிலிருந்து பெற வேண்டிய வருமானம் பெறப்படாமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| செயலிழந்துள்ள ரூபா 7,000,000 பெறுமதியான 04 நீர் உத்தேசத் திட்டங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நீர் கருத்திட்டங்களை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளரின் ஆலோசனையை பெற்று முன் நடவடிக்கை எடுக்கிறேன். |

### 3.5.4 சுவீகரிக்கப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ரூபா 32,000,273 பெறுமதியான 19 சுடுகாடுகள் மற்றும் 26 சனசமூக நிலையங்களை சுவீகரிக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுவீகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் சுவீகரிக்க நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.5.5 விளைவற்ற மற்றும் குறைபயன்பாட்டு சொத்துக்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2016 ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 514,080 பெறுமதியான 144 நீர் மாணிகள் விளைவற்று காணப்பட்டன. | நீர் மாணிகளை பொருத்த நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர் காலத்தில் நீர் மாணிகளை பொருத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.6 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கல்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| எல்லவத்த மற்றும் மீபிடிய நீர் உத்தேச திட்டங்களிற்காக கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 1,734,600 பெறுமதியான 354 நீர் மாணிகள் பயன்படுத்தப்படாது, 05 ஆண்டுகள் பூராவும் விளைவற்று நிலவியதுடன், மாணிகளை கொள்வனவு செய்ய பெறப்பட்ட கடன் தொகையின் தவணை தொகை சபை நிதியத்தினால் செலுத்தப்படுகின்றன. | நீர் மாணிகளை பொருத்த அல்லது வேறு செயற்பாடுகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | எதிர்காலத்தில் நீர் மாணிகளை பொருத்த நடவடிக்கை எடுக்கிறேன். |

**3.7 பெறுகைகள்**

**3.7.1 பிரதிபன்னல் இயந்திரமொன்றை கொள்வனவு செய்யதல்**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| ஒரு நிறுவனத்தினால் மாத்திரம் சமர்பிக்கப்பட்ட விலை மணுவை அடிப்படையாகக் கொண்டு ரூபா 154,000 செலுத்தி பிரதிபன்னல் இயந்திரமொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்தது. | பெறுகைகள் வழிகாட்டிக் கோவை பிரகாரம் நடவடிக்கை எடுக்க வேண்டும். | சபை தீரமானமொன்றின் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டதாக அறிவிக்கிறேன். |

**3.7.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2019 ஆண்டில் புதிய நூலக கட்டிடத்தை நிர்மாணிக்கையில், நிர்மாணம் மேற்கொள்ளப்படாத வேலைகளிற்காக ரூபா 602,042 ஆன தொகை ஒப்பந்தக்காரரிற்கு கூடுதலாக செலுத்தப்பட்டிருந்தது. | மேற்கொள்ளப்பட்ட வேலைகளை பௌதீக ரீதியாக பரீட்சித்து கொடுப்பனவு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். | தடுப்புப் பணத்திலிருந்து அறவிட நடவடிக்கை எடுக்கிறேன். |

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

**4.1 தீர்க்கப்படாத அவதானிப்புகள் மற்றும் பதில் கிடைக்காத கணக்காய்வு ஐயவினாக்கள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 2018 – 3.1(அ)(i)<br>சபை அதிகார எல்லையில் சிறிய மின் உற்பத்தி நிலையங்கள் உள்ள போதும், துணைச் சட்டம் தயாரித்து வருமானம் அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை. | துணைச் சட்டம் தயாரிக்கப்பட வேண்டும். | எதிர்காலத்தில் சரி செய்வதாக அறிவிக்கிறேன். |
| (ஆ) | 2018 – 3.3(இ)<br>கலபட நீர் வீழ்ச்சி சுற்றுலா இடத்தை பார்வையிட வரும் சுற்றுலா பிரயாணிகளின் பாதுகாப்பு, சுற்றாடல் பாதுகாப்பு, இற்காக நடவடிக்கை எடுக்காது நுழைவுப் பத்திரம் மாத்திரம் விற்பனை செய்வதை காணக் கூடியதாக இருந்தது. | சபைக்கு சொந்தமான சொத்துக்களை பாதுகாத்துக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும். | 40 சதவீத வேலைகள் முடிவடைந்துள்ளதுடன், எதிர்காலத்தில் குறைகளை நிறைவு செய்ய நடவடிக்கை எடுக்கிறேன். |
| (இ) | 2018 – 3.4.1 (ஆ)<br>2012 ஆண்டில் இடர் முகாமை அமைச்சிலிருந்து அன்பளிப்பாக கிடைத்த ரூபா 200,000 பெறுமதியான கொன்கிரீட் கலவை இயந்திரம் பல வருடங்களாக விளைவற்று நிலவியது. | சொத்துக்களை விளைவற்றுப் செல்ல இடமளிக்காது பயன்படுத்த வேண்டும். | அமைச்சுடன் கலந்துரையாடி, முன் நடவடிக்கை எடுப்பதாக அறிவிக்கிறேன். |
| (ஈ) | 2018 – 3.5<br>கிரீன் வூட் கருங்கல் கருத்திட்டத்துடன் தொடர்புடைய காணி பயன்பாட்டிற்காக கடந்த ஆண்டில் ரூபா 1,650,000 தொகை காணி மறுசீரமைப்பு சபையிற்கு செலுத்தியிருந்த போதும், கருத்திட்டத்திலிருந்து வருமானம் உழைக்க நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | வருமானம் உழைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். | 2020 ஆண்டில் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதாக அறிவிக்கிறேன். |